**சுருக்கம்**

பணியமைப்பு– சென்னை நீங்கலாக இதர மாநகராட்சிகளில் பணிபுரியும் சுருக்கெழுத்து–தட்டச்சர்களின் (Steno-typists) நுழைவு நிலை (entry level) ஊதிய விகிதத்தினை திருத்தியமைத்து ஆணைகள் வெளியிடல்.

= = = = = = = = = = = =

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு (மாந4) துறை

அரசாணை (4டி) எண்:03 நாள்: 19–04–2010

திருவள்ளுவராண்டு 2041, சித்திரை 6

படிக்கப்பட்டது

1. அரசாணை (நிலை) எண்.256, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் (பணியாளர்–பி) துறை, சென்னை 01–08–1992
2. அரசாணை (நிலை) எண்.284, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் (பணியாளர்–பி) துறை, சென்னை 19–08–1992
3. அரசாணை (நிலை) எண்.206, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு (மாந6) துறை, நாள் 22–10–2008
4. அரசாணை (நிலை) எண்.207, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் துறை, சென்னை 22–10–2008
5. நகராட்சி நிர்வாக இயக்குநர் கடித எண்.60847/2008/மாநஅ1 நாள் 11–02–2010

ஆணை:-

முதலாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் தமிழ்நாடு அமைச்சுப்பணி மற்றும் தமிழ்நாடு நீதித் துறை பணியில் தட்டச்சர், சுருக்கெழுத்து–தட்டச்சர் பணியிடங்கள், 'சுருக்கெழுத்து–தட்டச்சர்' 'நேர்முக எழுத்தர்' என இரண்டாகப் பிரிக்கப்பட்டு, சுருக்கெழுத்து–தட்டச்சர்/நேர்முக எழுத்தர் பணியிடத்திற்கு ஊதிய விகிதம் ரூ.1200–2040 என நிர்ணயிக்கப்பட்டது. இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் சுருக்கெழுத்து–தட்டச்சர் பணியிடம் மூன்று வகைப்பாடுகளாக பிரிக்கப்பட்டு, தலைமைச் செயலகத்தில் உள்ள சுருக்கெழுத்து–தட்டச்சர் பணியிடம் தவிர ஏனைய துறைகளில் உள்ள சுருக்கெழுத்து–தட்டச்சர் பணியிடம் சுருக்கெழுத்து–தட்டச்சர் நிலை–III (Steno-Typist Grade III) எனவும், மேல்நிலை (Upper Division) சுருக்கெழுத்து–தட்டச்சர் எங்கெங்கு உள்ளதோ அவற்றை சுருக்கெழுத்து–தட்டச்சர் நிலை–I மற்றும் II (Steno-Typist Grade I & II) எனவும் மாற்றி கீழ்கண்டவாறு ஊதிய விகிதம் நிர்ணயிக்கப்பட்டது:-

| பணியிடத்தின் பெயர் | 1–6–1988 முதல் நடைமுறையில் இருந்த திருத்தப்படுவதற்கு முன் இருந்த ஊதிய விகிதம் [Pre-revised scale of pay (w.e.f. 1-6-88)] | 1–1–1996 முதல் நடைமுறையில் இருந்த திருத்தப்பட்ட ஊதிய விகிதம் [Revised scale of pay (w.e.f. 1-1-1996)] |
|---|---|---|
| சுருக்கெழுத்து–தட்டச்சர் நிலை–I | ரூ.1600–2660 | ரூ.5300–8300 |
| சுருக்கெழுத்து–தட்டச்சர் நிலை–II | ரூ.1400–2600 | ரூ.5000–8000 |
| சுருக்கெழுத்து–தட்டச்சர் நிலை–III | ரூ.1200–2040 | ரூ.4000–6000 |

. . .2

2. ஈரோடு மற்றும் திருப்பூர் ஆகிய மாநகராட்சிகளில் சுருக்கெழுத்து–தட்டச்சர் பணியிடம் தோற்றுவிக்கப்படுவதற்கு முன்பிருந்தே, மதுரை, கோயம்புத்தூர், திருநெல்வேலி, திருச்சிராப்பள்ளி மற்றும் சேலம் ஆகிய மாநகராட்சிகளில் சுருக்கெழுத்து–தட்டச்சர் பணியிடம் ரூ.3200–85–4900 என்ற ஊதியவிகிதத்தில் நடைமுறையில் இருந்து வந்தது. ஈரோடு மற்றும் திருப்பூர் ஆகிய மாநகராட்சிகளில் தோற்றுவிக்கப்பட்ட சுருக்கெழுத்து–தட்டச்சர் பணியிடத்திற்கு ரூ.4000–100–6000 என மூன்றாவதாகவும் மற்றும் நான்காவதாகவும் படிக்கப்பட்ட அரசாணைகளில் ஊதிய விகிதம் நிர்ணயிக்கப்பட்டது. எனவே, ஈரோடு மற்றும் திருப்பூர் ஆகிய மாநகராட்சிகளில் சுருக்கெழுத்து–தட்டச்சர் பணியிடத்திற்கு நிர்ணயிக்கப்பட்ட ஊதிய விகிதத்தினை இதர மாநகராட்சிகளில் உள்ள சுருக்கெழுத்து–தட்டச்சர் பணியிடத்திற்கும் நீட்டிக்குமாறு ஐந்தாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் நகராட்சி நிர்வாக இயக்குநர் அரசுக்கு பரிந்துரை செய்திருந்தார்.

3. நகராட்சி நிர்வாக ஆணையரின் பரிந்துரையை அரசு கவனமுடன் பரிசீலித்து, அனைத்து மாநகராட்சிகளிலும் உள்ள சுருக்கெழுத்து–தட்டச்சர் பணியிடத்தினை நிலை–III பணியிடமாக மாற்றி, நுழைவு நிலை (Entry Level) ஊதிய விகிதம் ரூ.3200–85–4900 என்பதை ரூ.4000–6000 என திருத்தியமைத்து ஆணையிடுகிறது. அவ்வாறு திருத்தப்பட்ட ஊதிய விகிதத்தினை 01–01–1996 முதல் அல்லது சம்பந்தப்பட்ட சுருக்கெழுத்து–தட்டச்சுப் பணியாளர் பணியில் சேர்ந்த நாள் இவற்றில் எது பிந்தையதோ (Date of effect will be from 01-01-1996 or Date of appointment whichever is later) அந்நாள் முதல் நடைமுறைப்படுத்த வேண்டும் என ஆணையிடுகிறது.

4. இவ்வாணை, 02–04–2010 நாளிட்ட நிதித்துறை அ.சா.எண். 9880/ஊகு/2010–ல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

/ஆளுநரின் ஆணைப்படி/

நிரஞ்சன் மார்டி,
அரசுச் செயலாளர்.

பெறுநர்
நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை–5
ஆணையர், மதுரை / கோயம்புத்தூர் / திருச்சி / திருநெல்வேலி / சேலம் / மாநகராட்சி
இயக்குநர், உள்ளாட்சி நிதித் தணிக்கை, குறளகம், சென்னை–600 108
நகல்:-
மாண்புமிகு துணை முதலமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை செயலரின் தனிச் செயலர், சென்னை–9
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு (மாந5/மாந6/அந2) துறை. சென்னை–9
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு (இணையதளம்) துறை. சென்னை–9
இருப்புக் கோப்பு / உதிரி

ஆணைப்படி /அனுப்பப்படுகிறது

பிரிவு அலுவலர்